நெல்லுடைக்கும்
மா அரைக்கும் இயந்திர
உதிரிப்பாகங்கள்
மற்றும்
பொலித்தீன்,
கேக், குளிர்பான
தயாரிப்புக்களுக்கு
ராஜு
ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 18 வியாழக்கிழமை (01 - 06 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 186

கைக்கடிகாரம்!
அழகுசாதன, அன்பளிப்பு.
எவர்சில்வர்,
விளையாட்டுப்
பொருள்களுக்கு
நாடுங்கள்!
ராஜு
ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார்வீதி.
யாழ்ப்பாணம்.

சமாதான முயற்சிக்கு உதவுவது குறித்து ஆராயவே கனடா அமைச்சர் வருகை

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கச் செய்வதற்கு உதவ முடியுமா என்பதை ஆராயவே கனடா நாட்டின் வெளியுறவு இணை அமைச்சர் றேமன்ட் சான் நேற்று கொழும்பு வந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

கனடாவின் வெளிவிவகார இணை அமைச்சரும் ஆசிய — பசுபிக் விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான றேமன்ட் சான் மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

சமாதான முயற்சிகள் ஏன் முறிவடைந்தன என்பது குறித்தும் —

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கச் செய்வதற்கு கனடா ஏதும் வகையில் உதவ முடியுமா என்பது குறித்தும்—

அறிந்து கொள்வதே தமது கொழும்பு வருகையின் நோக்கம் என அமைச்சர் சான் கொழும்பில் பி. பி. ஸி. செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

இந்தத் தடவை தமது விஜயம் வெறுமனே உண்மை நிலையைக் கண்டறியும் வருகையே என்றார் அவர்.

"விடுதலைப் புலிகளின் பிரமுகர்களை இந்த விஜயத்தின்போது சந்திக்கும் நோக்கம் உங்களுக்கு உண்டா?— என்று கேட்டபோது—

"இம்முறை இல்லை"— என்று பதிலளித்தார் அவர்.

"எங்களின் பார்வையாளர்கள் இங்கு இருக்கிறார்கள். அவர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருக்கிறார்கள். அவர்களே எமக்கு விடுதலைப் புலிகளுடனான முக்கிய தொடர்பாளர்களாக உள்ளனர்"— என பதில் அளித்தார் அவர். [உ-3]

ரூ. 70 லட்சம் கொழும்பில் கொள்ளை

கொழும்பு, ஜூன் 1

கொழும்பு பகுதியில் தனியார் வங்கி ஒன்றில் வைப்பில் இடுவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட 70 லட்சம் ரூபா பணம் ஆயுதபாணிகளால் கொள்ளையடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுதபாணிகளுக்கும் பணம் எடுத்துச் சென்றவர்களுக்கும் இடையில் ஐந்து நிமிட நேரம் மோதல் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக் கொள்ளைச் சம்பவம் பற்றிய மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை.

(உ-3)

வடக்குக்கு இனி கப்பல்களில் உணவுப் பொருள்கள் மட்டுமே!

துறைமுகப் பணிகளை கடற்படை பொறுப்பேற்பு

கொழும்பு துறைமுகத்தில் சகல பணிகளையும் கடற்படையினர் பொறுப்பேற்றுள்ளனர் என தெரியவந்தது.

கொழும்பு துறைமுகம் விடுதலைப்புலிகளால் தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக இந்த புதிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்துக்குள் செல்லும் சகல வாகனங்களும் கடற் படையினரால் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் —

குண்டு போன்ற பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்க விசேட கருவிகள் மூலம் சோதனையிடப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

துறைமுகத்தில் கண்டபடி ஆட்கள் நுழைவதை தடை செய்துள்ள கடற்படையினர் அங்கு வேலைக்கு செல்வோரை கடும் சோதனைக்கு உட்படுத்துவதாகவும் — தெரியவந்தது. (இ-3)

மே மாதத்தில் மட்டும் 205 படையினர் பலி!

விடுதலைப்புலிகளின் தாக்குதலில்

நேற்றுடன் முடிவடைந்த மே மாதம் முழுவதிலும் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 205 ஸ்ரீலங்கா படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

9 மோட்டார்கள், 7 ஆர்.பி.ஜிக்கள், 16கோக் கொமாண்டோக்கள் உட்பட பெருமளவு இராணுவ தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கடந்த மாதத்தில் கைப்பற்றியுள்ளனர்.

வவுனியா எல்லைப்புற காட்டுப் புளியங்குளம் பொலிஸ் - இராணுவ கூட்டு முகாமும், மட்டக்களப்பு தரவைக்குளம் முகாமும் இம் மாதத்தில் தாக்கி அழிக்கப்பட்டன.

விசேட அதிரடிப் படையின் ரோந்து அணி ஒன்று அம்பாறையில் முற்றாக அழிக்கப்பட்டது.

இரு சலாடின் கவச வாகனங்கள், ஒரு பவல் கவச வாகனம், ஓர் இராணுவ டிரக் என்பவற்றையும், படையினர் விடுதலைப் புலிகளிடம் இழந்துள்ளனர்.

தரவைக்குளம் முகாம் தகர்ப்பின்போது ஹெலி ஒன்றும் புலிகளால் சேதமாக்கப்பட்டது. (அ-3)

திரியாயில் சிப்பாய் பலி! மற்றும் இருவர் காயம்

கொழும்பு, ஜூன் 1

திருகோணமலை மாவட்டத்தில் — புல்மோட்டைக்கு தென் கிழக்கில் — திரியாயில் நேற்று முன் தினம் இரவு தேடுதலில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

கொழும்பில் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. [உ-3]

இடைத் தேர்தல்களில் காங்கிரஸுக்கு அதிக இடம்

புதுடில்லி, ஜூன் 1

இந்தியாவில் 26 சட்டப் பேரவை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற இடைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் 10 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

நேற்றிரவுவரை வெளியான 24 முடிவுகளின் படி இந்திரா காங்கிரஸ் 10இடங்களிலும்— ஜனதா தள், சமாஜவாதி ஆகிய கட்சிகள் தலா 3 இடங்களிலும் —

தெலுங்கு தேசம் பாரதிய ஜனதாக் கட்சி ஆகியவை தலா இரண்டு இடங்களிலும் —

போர்வேட் புளொக், சி. பி. ஐ. எம், ஆர். எஸ் பி. தம்பிராம் நிகாஷ் கட்சி ஆகியன தலா ஓர் இடத்திலும் —வெற்றி பெற்றுள்ளன.

ஏனைய பாவனைப் பொருள்கள் எடுத்து வருவதற்கு அரசு தடை!!

— உதயன் அலுவலகச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடபகுதிக்கு இனிமேல் கப்பல்களில் உணவுப் பொருள்களை மட்டுமே கொழும்பிலிருந்து எடுத்துவர முடியும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

அரசாங்கத் திணைக்களங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தனியார்துறை உட்பட எவருக்கும் உணவுப் பொருள்கள், மண்ணெண்ணெய் தவிர்ந்த ஏனைய பாவனைப் பொருள்கள் எதனையும் எடுத்துவர முடியாது என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள உயர் அதிகாரிகள், யாழ். அரசாங்க அதிபருடன் கலந்தாலோசனை நடத்திய பின்னரே இந்த முடிவுக்கு வந்ததாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கப்பல் மூலம் பொருள்களை யாழ் மாவட்டத்துக்குக் கொண்டு வருவதிலுள்ள தாமதங்களை எடுத்துரைப்பதற்காக யாழ் அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் கடந்த வார இறுதியில் கொழும்பு சென்றிருந்தார்.

உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது, தாமதத்தை தவிர்ப்பதற்கு மாற்று வழியாக உணவுப் பொருள்களையும், மண்ணெண்ணெய்யையும் மட்டுமே கப்பல்களில் எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியும் என்று அவர்கள் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

கூட்டணி ஜனாதிபதிக்கு எடுத்துரைப்பு:

புலிகளுடன் பேச்சுகள் நடத்தாமல் சமாதானத் தீர்வு காணமுடியாது!

ஆதரவை விலக்கப் போவதாகவும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 1

★ தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தாது வடக்கு-கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தமுடியாது

★ சமாதான வழிகளில் பிரச்சினைக்குத் தீர்வு காணாது — முன்னைய அரசாங்கம் போல் — தற்போதைய அரசாங்கமும் தமிழ்மக்களுக்கு எதிராகப் போர் தொடுக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளது. அத்தகைய போக்கை அரசு தொடர்ந்து கடைப்பிடிக்குமானால் அரசுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்க முடியாது.

— இவ்வாறு நேற்று முன் தினம் ஜனாதிபதியைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

வடக்கின் முக்கால்வாசிப் பிரதேசமும், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் பெரும் பகுதியும் விடுதலைப்புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்நிலையில் புலிகளைத் தவிர்த்து விட்டு. சமாதானத் தீர்வு காண்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் கூட்டணியினர் ஜனதிபதிக்குச் சுட்டிக் காட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசு — புலிகள் யுத்தநி

[6ஆம் பக்கம் பார்க்க]

ஹொரவப்பொத்தானையில் முகாம்! புலிகள் தாக்குதலை அடுத்து வாபஸ்!

சிப்பாயும், ஊர்காவலர் ஒருவரும் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

அநுராதபுரம் எல்லைப் பகுதியில் விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை நடத்திய தாக்குதலையடுத்து அப்பகுதியில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவ முகாம் [illegible] யாக வாபஸ் பெறப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா [illegible] அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள ஹொரவப் பொத்தானை வாகல் கடவலவில் இராணுவ முகாம் ஒன்றின் மீது நேற்றுக் காலை விடு[illegible] நடத்தினர். [illegible] ஒருவரும், ஊர்காவல் படை உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டனர். மற்றொருவர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலை யடுத்து முகாமில் இருந்த இராணுவத்தினர் அனைவரும் பின்வாங்கி [illegible] பாதுகாப்புவட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் தெரிவித்தன. (உ-3)

கிழக்குக் களத்தில் சாள்ஸ் அன்ரனி அணி?

மணிலா, ஜூன் 1

கிழக்கில் இராணுவத்தினர் மேற்கொண்டுள்ள தேடி அழிக்கும் நடவடிக்கையை முறியடிப்பதற்காக விடுதலைப் புலிகள் தமது விசேட படையணியான "சாள்ஸ் அன்ரனி பிரிகேட்டை" அனுப்பியுள்ளதாக இராணுவச் செய்திகளை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

காடுகளில் தாக்கும் நடவடிக்கை ஆரம்பம்

கிழக்குக் குறித்து ராணுவ அதிகாரி

கொழும்பு, ஜூன் 1

இராணுவத்தின் கவனத்தை வடக்கில் இருந்து திசைதிருப்புவதற்காக கிழக்கில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதையடுத்து —

கிழக்கில் விசேட படையினரும், கொமாண்டோ படையினரும் கிழக்குக் காடுகளில் பதுங்கியிருந்து தாக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

காட்டுப் பகுதிகளில் உள்ள புலிகளின் மறைவிடங்களை தாக்கி அழிக்கும் வகையில் இந்நடவடிக்கையை கடந்த சனிக்கிழமை ஆரம்பித்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

புல்மோட்டை, ஹெலி ஓயா பகுதிகளில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நீர்கொழும்பு முகவரியுடன் யாழ்வாசிகளுக்கு அ. அட்டை

கிராம சேவையாளர் பிடிபட்டார்

கொழும்பு, ஜூன் 1

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலருக்கு நீர்கொழும்புவாசி எனக் குறிப்பிட்டு அடையாள அட்டைகளை வழங்குவதற்காக போலி ஆவணங்களை தயாரித்து வழங்கிய கிராம சேவையாளர் ஒருவர் அகப்பட்டுக்கொண்டார்.

நீர்கொழும்பு அத்தராவ பகுதி கிராமசேவையாளர் ஒருவர் அங்கு தங்கி நிற்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் அடையாள அட்டை பெறுவதற்கு உதவ மூவாயிரம் ரூபா பெற்றதாகவும் —

வதிவிடத்தை நிரூபிக்கும் கடிதத்தை வழங்கி அவர்கள் அடையாள அட்டை பெற உதவினார் என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது

குடும்பத்துக்கு 2 லீற்றர் ம.எண்ணெய் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 1

"மாஹோ" கப்பலில் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெய்யை குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2 லீற்றர் வீதம் பங்கீட்டு அடிப்படையில் வழங்க புனர்வாழ்வுப் பிரிவு நடவடிக்கை ;எடுத்துள்ளது.

இது தொடர்பாக செயலகத் திட்டப் பணிப்பாளர் எஸ். பத்மநாதன் பிரதேச செயலர்களுக்கு சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 25 ரூபாப்படி விற்பனை செய்யப்படும்.

"மாஹோ" கப்பலில் 4 ஆயிரத்து 900 பரல் மண்ணெண்ணெய் எடுத்து வரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [உ-117]

கொழும்பில் காடையர்கள்

சோதனை என்ற பெயரில் தமிழரின் பணம் பறிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

கொழும்பில் உள்ள காடையர் கோஷ்டிகள் சோதனை என்ற போர்வையில் தமிழ் மக்களிடம் பணம் பறிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிள்களில் வரும் இக்காடையர் குழுக்கள் தமிழ் இளைஞர்கள், யுவதிகளை மறித்து அடையாள அட்டைகளை கேட்பதாகவும் —

அடையாள அட்டையை காட்டுவதற்காக தமது "பேர்ஸ்களை" அவர்கள் எடுத்ததும் அதில் இருக்கும் பணத்தை உருவிக்கொண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

படையினர் ஐவர் காயம்

மட்டக்களப்பில் ஹெலி ஓயா காட்டுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை கொமாண்டோக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதல் ஒன்றில் 5 கொமாண்டோக்கள் காயமடைந்ததாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

★ திருமண அழைப்பு ★

மணமகன் திருவளர் செல்வன் பேரானந்தம்
மணமகள் திருவளர் செல்வி உமாராணி
(சங்கீத ஆசிரியை, யா / லைட்டி மெ. மி. த. க. பாடசாலை)

காலம்: 03 — 06 — 1995 சனிக்கிழமை
பகல் 10-22 — 12-00 மணி

இடம்: வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோயில் கல்யாண மண்டபம்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கும் ★

காலஞ்சென்ற நாச்சிமார் கோயிலடி
உபதபாலதிபர் வே. இராசையா அவர்களின்
மகன் ஸ்ரீதரன் குடும்பத்தினர்.

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

[சி-36878]

வலி–மேற்குப் பிரதேச வணிகர் கழகத்தால்
நடத்தப்பட்ட

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு 7402 2 ஆம் பரிசு 4009
3 ஆம் பரிசு 9377 4 ஆம் பரிசு 2424

மேற்படி இலக்கச் சீட்டுகளை வைத்திருப்போர் 15 – 06 – 1995 இற்கு முன் பொருள்களை எமது அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

– நிர்வாகம்.

பிரதான வீதி, குளத்தடி,
சங்கானை.

[36878]

விண்ணக இன்பத்தின்

31-ம் நாள் நினைவஞ்சலி

மங்கள மலர்வு:
13 — 01 — 1936

விண்ணக விரைவு:
02 — 05 — 1995

• அமரர் அந்தோனி தாவீது

[டேவிட்]

(யா/ஸ்கந்தவரோதயாக கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியர்)

விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுவதேயன்றி அழிக்கப்படுவதில்லை.

அன்பு நிறைந்த எம் தலைவா! உம்மை நினைக்கையிலே – எம் உள்ளம் உருகுதையா. மூன்று பத்து நாட்கள் ஆகினவே உங்கள் அன்புருவம் நாம் கண்டு. ஆறவில்லை அந்தக் காயம் – இனி அழுது இது தீராது. அரற்றி அது மாறாது உமது ஆன்மா இறை இன்பத்தில் இணைந்திட இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இவரது ஆன்ம சாந்திக்காக சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று 1 - 6 - 95 வியாழக்கிழமை காலை 6-15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியிலும். தொடர்ந்து நண்பகல் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து அவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

[36865]

SECOND YEAR REMEMBRANCE

In ever loving memory of

PRIMROSE PATHMADEVI SABAPATHYPILLAI

(RANEE)

Called to rest: 1st June 1993

'Blessed are the dead,
Which die in the Lord''

Fondly remembered by:
Her Loved Ones

''Primrose Cot''
Chavakachcheri.

[C-1280]

கண்டெடுக்கப்பட்டுள்ளது

மல்லாகம் புகையிரத நிலைய வீதியில் கைச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டது உரியவர் உரிமையை வெளிக்காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

சி. ஜெயகாந்தன்
ஏழாலை மேற்கு,
உத்தமன் சிலையடி.

[8422]

பதவி வெற்றிடம்

நிர்வாக உத்தியோகத்தர்

கீழ் காணும் பதவிக்குரிய வெற்றிடத்தை நிரப்புவதற்கு எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட திகதியில் 06-06-1995 காலை 10.00 மணிக்கு இந்தப் பதவிக்குரிய தகைமைகளையுடைய பொருத்தமான அபேட்சகர்கள் விண்ணப்பங்களுடனும், சுயவிபரங்களுடனும், கல்விச்சான்றிதழ்களுடனும், குணநலச் சான்றிதழ்களுடனும் நேர்முகப் பரீட்சைக்கு தமிழீழ நிர்வாக சேவை நடுவப்பணியகத்திற்கு வருகை தரவும்.

01. தமிழீழ பிரஜையாக இருக்க வேண்டும்.
02. பொருத்தமான கல்வித் தகைமையுடையவராகவும், தேகாரோக்கியமுடையவராகவும் இருக்க வேண்டும்.
03. மோட்டார் வண்டி ஓடக்கூடிய தேகாரோக்கியம் உடையவராகவும் இருக்க வேண்டும்.
04. வயதெல்லை 35 — 60 வருடங்கள்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முகாமைத்துவப்பட்டம் பெற்றிருக்கவேண்டும். அல்லது ஏதாவது ஒன்றில் பட்டம் பெற்றவராகவும், திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் / அரசசார்பற்ற நிறுவனங்களின் நிர்வாக உத்தியோகத்தரத்திலான பதவியில் 10 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் அல்லது இலங்கை நிர்வாக சேவையின் பரீட்சையில் தேர்ச்சி அல்லது இவைகளுக்கு சமமான தகுதியும், அனுபவமும் இருக்க வேண்டும்.

பொறுப்பாளர்
தமிழீழ நிர்வாக சேவை
தமிழீழம்

(சி/1284)

ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
08 — 06 — 1930

கர்த்தருக்குள்:
31 — 05 — 1994

ஆதர் கணேசபிள்ளை யோசேப்

[இளைப்பாறிய உடற்பயிற்சி ஆசிரியர் –
யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம்]

*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையும் செய்ய
எனக்குப் பெலனுண்டு.*

செல்வதேவி யோசேப்
[மனைவி]

199/1, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[36812]

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு:
09 — 09 — 1928

உதிர்வு:
03 — 05 — 1995

அமரர் கந்தையா பொன்னுத்துரை

(முன்னாள் ஒய்வு பெற்ற மருந்து கலவையாளர்,
யாழ். அரசினர் வைத்தியசாலை)

நாளை (02-06-95) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

— குடும்பத்தினர்.

இல. 25, [illegible]
நல்லூர்.

(36880)

ஆலயங்களில்

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயில் உற்சவம் 3ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த் திருவிழா 11ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா 12ஆம் திகதியும் நடைபெறும். உற்சவ நாட்களில் தினமும் இரவு 7-30 மணி முதல் திரு. செ. சத்தியமூர்த்தியின் சமயச்சொற்பொழிவு இடம்பெறும். (க)

★ ★ ★

அராலி தெற்கு களவத்துறை வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பொங்கல் விழாவுடன் அலங்கார உற்சவம் நிறைவுறும். (க-12)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு மன்றுளாடும் ஸ்ரீ விநாயகப் பெருமான் ஆலய வருடாந்த உற்சவம் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 – 00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

11ஆம் திகதி காலை 9–00 மணிக்கு தேர்த்திருவிழாவும், 12ஆம் திகதி காலை 10–00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

தினமும் மாலை 6–00 மணிக்கு திரு ஆறு. திருமுருகனின் சமயச் சொற்பொழிவு நிகழும். (க-30)

★ ★ ★

சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் 3ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இரதோற்சவம் 12ஆம் திகதியும், தீர்த்த உற்சவம் 13ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. உற்சவ தினங்களில் தினமும் மாலை 5மணி தொடக்கம் 6 மணி வரை 'விநாயகர் புராணம்' பற்றிய தொடர் சொற்பொழிவை அகில இலங்கை கம்பன் கழகத்தை சேர்ந்த திரு ஆறு திருமுருகன் நிகழ்த்துவார். (க-135)

★ ★ ★

கந்தர்மடம் புகையிரத வீதி உதயநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை அபிஷேகமும் மாலை 4 மணிக்கு சிறப்புரைகளும் இரவு 8 மணிக்கு திருக்குளிப்பும் நடைபெறும். (க)

★ ★ ★

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக கிரியைகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3-10 மணி முதல் நடைபெற உள்ளன. மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளி முற்பகல் 9-10 மணிக்கு இடம்பெறும். (ஐ)

பாலர் விளையாட்டுப் போட்டி

தென்மராட்சி ஜூன் 1

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் மீசாலை இல்மன் பாலர் பாடசாலை சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழன் பி. ப. 2 00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் திருமதி சி. சிவபாலசேகரம் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு. ஆ. தெய்வேந்திரமும், தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. வெற்றிச்செல்வனும் கலந்து கொள்வார். [ஐ–117]

வடபிரதேச இந்து இளைஞர் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

வட பிரதேசத்தில் சமூக மேம்பாட்டுப் பணிகளில் ஆர்வம் உள்ள இந்து இளைஞர் பிரதிநிதிகள், இந்துப் பிரமுகர்கள், அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் இந்துப் பிரதிநிதிகள் ஆகியோரின் கூட்டம் ஒன்று அண்மையில் யாழ். மெய்கண்டதேவர் ஆதீனத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ''வடபிரதேச இந்து இளைஞர் அமைப்பு'' அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வடபிரதேசத்தில் ஆன்மீக சமூக மேம்பாட்டுப் பணிகளை ஒருமுகப்படுத்தி மேற்கொள்ளும் நோக்கத்துடனேயே இந்த அமைப்புஸ்தாபிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது. (க)

உ
ஐயப்பன் துணை

புதுமனை புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ வருடம் வைகாசி மாதம் 18ஆம் நாள் (01-06-95) வியாழன் இரவு 7-26 மணி முதல் 8-40மணிவரையுள்ள [illegible]லக்கின சுப முகூர்த்த வேளையில் பு[illegible]மனை புகுவிழா நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து கலந்து சிறப்பித்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி நடராசா

''நிர்மல கிரி''
கல்வயல்,
சாவகச்சேரி.

(8569)

கொக்குவில்

ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

பழைய மாணவர் சங்க

புனரமைப்புக் கூட்டம்

மேற்படி பாடசாலை பழைய மாணவர் சங்க புனரமைப்புக் கூட்டம் 11 - 06 – 95 திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அதிபர் திருமதி. க. சுப்பிரமணியம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் அளிக்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

க. சுப்பிரமணியம்
அதிபர்

[36881]

JAFFNA COLLEGE

INTER HOUSE ATHLETIC MEET

Will be held on
Saturday 3rd June at 2-30 p.m. at the
BICKNELL STADIUM

Cheif Guests:
Mr. & Mrs. A. Jeyaveeresingam

Parents, Aiumni and Friends are Cordially Invited.

G. RAJANAYAGAM,
Principal.

[C-1429]

வேம்படி மகளிர் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

ஆண்டுப் பொதுக்கூட்டம்

15-07-1995 சனிக்கிழமை

பிரேரணை கோரல்

ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய பிரேரணைகள் இருப்பின் அவற்றை 15 – 06 – 1995 ஆம் திகதிக்கு முன் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி அங்கத்தவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

திருமதி சௌ. குணசீலன்
செயலாளர்

வைத்தியகலாநிதி
செல்வி ந. கனகரத்தினம்
தலைவர்

[சி/1286]

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பின்வரும் பயிற்சி நெறிக்கான
விண்ணப்பங்கள்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால்
கோரப்படுகின்றன

- ★ தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து
- ★ ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து
- ★ உடையமைத்தல்
- ★ தையல் இயந்திரம திருத்தற் பயிற்சி [ஆண். பெண் இருபாலாருக்கும்]
- ★ நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தற்பயிற்சி
- ★ துவிச்சக்கர வண்டி திருத்தற் பயிற்சி [பெண்கள் மட்டும]

தகைமைகள்:

01. தமிழ்/ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி நெறிக்கு ஜி. சீ. ஈ (சாதாரணம்) பரீட்சையில் தமிழ்/ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
02. ஏனைய பயிற்சி நெறிகளுக்கு ஜி. சீ. ஈ (சாதாரணம்) வரை கற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 05-06-1995

சுய விபரங்களுடன் விண்ணப்பங்கள்
அனுப்பவேண்டிய முகவரி

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ம் குறுக்கு தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/1285)

வ

விநாயக புராணம் தொடர் சொற்பொழிவு

பூர்த்தி விழா

இணுவில்
ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில்
மகோற்சவத்தை முன்னிட்டு
திரு. ஆறு. திருமுருகனால்
நிகழ்த்தப்பெற்ற
"விநாயக புராணம்"
எனும் தொடர் சொற்பொழிவின் பூர்த்திவிழா வைபவம்
இன்று 01-06-95 வியாழக்கிழமை
இரவு 8-30 மணிக்கு நடைபெறும்
குறிப்பு: இன்றைய தினம்
ஆறு. திருமுருகனை
கௌரவித்து பாராட்டும் வைபவமும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.
இங்ஙனம்
விழா உபயகாரர்கள்.

விளம்பர அன்பளிப்பு:
பிள்ளையார் ஸ்ரோஸ்
புகையிரத நிலைய வீதி, கன்னாகம்.
[36872]

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
18
—
11
—
1955

மறைவு:
01
—
06
—
1994

திருமதி பராசகதி பாலச்சந்திரன்

திதி: 19-06-1995

ஆண்டொன்று போச்சுதம்மா அன்னையுனைப் பிரிந்து
நீண்ட வழி நீ நடந்தும் நெஞ்சம் மறக்குதில்லை
விதியென்றால ஏற்குதில்லை விழிகள் சுரக்குதம்மா
விதைத்தவள் மறைந்துவிட்டாய் வித்துகளோ-
வாடுகின்றோம்
பாலகர் எம் நன்மைகளை பார்க்காது-
மறைந்துவிட்டாய்
காலனவன் கொடுமையதால் கலங்குகின்றோம்-
நாளை முழுதும்
நித்தம் எம் நெஞ்சகளில் நீடு நீ வாழ்ந்திடுவாய்-
உன்
முத்து நகை முகம் நெஞ்சில் முழு வாழ்வும்-
நிலைத்திருக்கும்

கணவர்: பாலச்சந்திரன்,
பிள்ளைகள்: கஜேந்திரா, பிரவீனா,
சர்மிளா, சகித்தா,
உற்றார், உறவினர்,

48/1, பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(36862)

31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
15
—
04
—
1927

உதிர்வு:
02
—
05
—
1995

திருமதி

கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம்

எமது குடும்பத்தின் கலங்கரை விளக்காக இருந்து எம்மை எல்லாம் உயரவைத்து எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு பிரிந்து சென்று திங்கள் ஒன்று ஆனாலும், உங்கள் நினைவு எம்மனதை விட்டு என்றென்றும் அகலாது தாயே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''தங்கமலர் பவனம்'',
தம்பகாமம், பளை

[36875]

கப்பலில் பொருள்கள் எடுத்துவர யாரிடம் அனுமதி பெறவேண்டும்?

சரியான தகவலின்றி "குமண" காத்திருக்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடக்கே தனியார் மற்றும் ப.நோ.கூ. சங்கங்களுக்கு உணவுப் பொருள்களை கப்பல் மூலம் எடுத்துவர யாரிடம் சென்று அனுமதி பெறுவது என்பது குறித்த ஒன்றும் தெரியாத நிலையில் சம்பந்தப்பட்டவர்கள் சங்கடப்படுகிறார்கள்.

வடக்கே தனியார் மற்றும் ப.நோ.கூ. சங்கங்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை யாழ். அரச அதிபரின் இணைப்பதிகாரியின் அனுமதியுடன் இதுவரை எடுத்துவரக்கூடியதாக இருந்தது.

ஆனால் தற்பொழுது —

உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதியை யாழ். அரச அதிபரின் இணைப்பதிகாரியா, புனர்வாழ்வு அமைச்சு அதிகாரியா, பாதுகாப்பு அமைச்சு அதிகாரியா இவர்களில் யார் வழங்க வேண்டும் என்ற விடயம் குறித்து முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இதன் காரணமாக தனியாருக்கு பொருள்களை ஏற்றுவதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட ''குமண'' கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே தரித்து நிற்பதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இதேவேளை — நிவாரணப் பொருள்களை ஏற்றும் பணியில் ''லங்கா முடித'' கப்பல் தற்சமயம் கொழும்பில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது [ஒ-3]

வடக்கு - கிழக்கிற்கு

இடைக்கால நிர்வாகசபை; 4 கட்சிகள் கோரிக்கை

வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்க வேண்டும் என்ற போசனைக்கு முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் 3 தமிழ்க் கட்சிகள் இணங்கியுள்ளன.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் 3 தமிழ் கட்சிகளான புளொட், ஈ.பி.டி.பி., மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றுடன் பேச்சு நடத்திய வேளையிலேயே இவ் இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

தற்கொலைப் படைபிரிவை ஜே.வி.பி. தர தயாராம்

கொழும்பு ஜூன் 1

அரசாங்கம் விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்கு ஆறுமாத காலத்திற்குள் தற்கொலைப் படை ஒன்றைத் தம்மால் அமைத்துக் கொடுக்க முடியும் என்று ஜே.வி.பி. பிரமுகர் ஜி.ஐ. தர்மசேகரா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தங்களது கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி உதவி கேட்கும்பட்சத்தில் தற்கொலைப் படையை அமைத்துக்கொடுக்க முடியும் என்று தர்மசேகரா கூறியதாக 'திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-6)

கருத்தரங்கு

சூழல் பாதுகாப்பு தினத்தை ஒட்டி சாவகச்சேரி நகர்ப்பிரிவு சுகாதார சூழல் பாதுகாப்புக் குழுவினர் நடத்தும் சூழல் பாதுகாப்புத் தினக் கருத்தரங்கு எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3-00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் சாவகச்சேரி நகர்ப்பிரிவு கிராம அலுவலர் வை. இராசரத்தினம தலைமையில் நடைபெறவுள்ளது (க-117)

'உதய கீதங்கள்' அறிமுக விழா

மீசாலை அ.சி. ஏரம்பமூர்த்தியின் 'உதய கீதங்கள்' நூல் அறிமுகவிழா கடந்த மாதம் 27 ஆம் திகதி பளை மத்திய கல்லூரியில் தென்மராட்சி கலைபண்பாட்டுத் துறைப் பொறுப்பாளர் திரு. அன்பு தலைமையில் நடைபெற்றது. [க-117]

அனுமதி பெற்று சென்று

ஆற்றில் மீன பிடித்தவர் படையினரின் சூட்டுக்கு பலி

மட்டு, கிண்ணையடியில் சம்பவம்

மட்டக்களப்பு கிண்ணியடியில் உள்ள ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொலைப்பட்டார்

மீராவோடையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான தங்கராசா கனகசபை (35 வயது) என்பவரே கொலையுண்டவர் ஆவார்.

கிரான் பாலத்தடி இராணுவ முகாமில் இருந்து வருகை வந்த இராணுவத்தினரே இந்த மீனவரை சுட்டுக் கொன்றுள்ளனர் என்றும் —

கொலையுண்ட மீனவர் அந்த முகாமில் தனது அடையாள அட்டையைக் காட்டி அனுமதி பெற்றே ஆற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

இன்றைய போராட்ட காலத்தில் கலைகளின் பயன்பாடு முக்கியமானது

வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் உரை

''இன்றைய போராட்ட காலத்தில் கலைகளின் பயன்பாடு முக்கியமானது. எமது நீண்டகாலப் பண்பாடு கலைகளின் ஊடாக வளர்க்கப்படுகின்றன.''

வலிகாமம் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கு. திருக்குமரன் இவ்வாறு கூறினார்.

வலி தெற்கு பிரதேச கலை, கலாசார பேரவை நடத்திய 3நாள் கலை விழாவில், முதல் நாள் நடைபெற்ற புனரமைப்பு செய்யப்பட்ட கலையரங்கின் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

வலி தெற்குப் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் கலை விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

திரு. திருக்குமரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

போர்க்களையில் இன்று நாம் முன்னேறியுள்ளோம். பலமான வாழ்வு எமக்கு தேவையாக இருக்கின்றது போராட்டம் மூலம் எமது சுதந்திரத்தை பெற்றெடுக்க பலம் தான் வாழ்வு என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

1974இல் தமிழுக்காக எடுக்கப்பட்ட விழா சிங்கள பேரினவாதிகளால ஒடுக்கப்பட்டது. ஆனால் இன்று —

இருபது ஆண்டுகளின் பின் நாம் பெற்ற பலம் சிங்கள பேரினவாதிகளை தொழிலாளர் தினத்தைக் கூட கொண்டாட முடியாது செய்துள்ளது. இது தமிழனின் வரலாற்று மாற்றம்-பலத்தின் வாழ்வு.

நாம் எமது விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப்பதுடன் எமது வாழ்வுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத்துறைகளையும் வளர்க்க வேண்டும். கலையின் வளர்ச்சிக்காக இன்று ஒரு அரங்கம் திறக்கப்பட்டது ஒரு வரலாற்று நிகழ்வாகும் என்றார்.

யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. இரத்தினராசா, திரு. எஸ். கே. உதயசூரியன், திரு த. தேவராஜன் ஆகியோரும் உரையாற்றினர்

கலை நிகழ்ச்சிகளாக பரத நாட்டியம (கூட்டு நடனம் தனி நடனம், வயலின் சோலோ நாடகம் ஆகியன இடம் பெற்றன. [க-152]

வ

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் யுவ வருடம் வைகாசித் திங்கள் 20 ஆம் நாள் (03 - 06 1995)
சனிக்கிழமை பகல் 11-15 — 12-10 மணி வரையுள்ள
பூச நட்சத்திர சித்தயோக வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
சுதாகரன்
(பொறியியலாளர்)
அவர்களுக்கும்

★ ● ★ ● ★ ●

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
சுபஸ்ரீ
அவர்களுக்கும்

இறைவன் திருவருளாலும் பெரியோர்கள் நிச்சயித்த வண்ணமும் மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்த இருப்பதால், அச்சமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து மணவிழாவினை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

★ தங்கள் நல்வரவை விரும்பும் ★

திரு. திருமதி சுப்பிரமணியம்
குடும்பத்தினர்,
''சாந்தி அகம்''
கரவெட்டி

திருமதி துரைராஜா
குடும்பத்தினர்,
கொத்தியால் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

[36857]

பாடசாலை வைர விழாவில் மூத்த ஆசிரியர் கௌரவம்

வலிமேற்கு ஜூன். 1

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய வைர விழா நாளை வெள்ளிக்கிழமை சிறந்த முறையில் கொண்டாடப்பட உள்ளது.

வித்தியாலய அதிபர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவில் மேலை வீதியில் நாளை பிற்பகல் 3மணிக்கு விழா ஆரம்பமாகும்.

கல்விப்பகுதி அதிகாரிகள் மற்றும் பல சமய சமூகப் பிரமுகர்கள் விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஆசிரியர்களாகச் சேவையாற்றிய மூத்த ஆசிரியமணிகளான வி. துரைசுவாமி, வி. வைரமுத்து ச. வேலுப்பிள்ளை ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட உள்ளனர். (அ-175)

சிவமயம்
ஓம் சக்தி
வட்டுக்கோட்டை, சங்கரத்தை பத்திரகாளி
அம்பாள் ஆலயம்
வீரபத்திர ஆலய
கும்பாபிஷேகமும் சங்காபிஷேக

விஞ்ஞாபனம்

கிரியாரம்பம்: **01 - 06 - 1995** வியாழன் மாலை **4-00** மணி முதல்

வீரபத்திரர் கும்பாபிஷேகம்:

02 - 06 - 1995 வெள்ளி காலை **6** மணி முதல் **7** மணி வரையில் வரும் சுபவேளையில் புனர்பூச நட்சத்திர தினத்தில் கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்தமையால் அம்பிகை அடியார்கள் அனைவரும் வந்து இஷ்டசித்திகளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ:
மு. ரவிகுருக்கள் - அராலி
ஆலய பிரதம குரு:
ஆ. சிவலிங்காதர குருக்கள்
ஆலய கட்டட நிர்மாண சிற்பாச்சாரி:
கந்தசாமி - கோபாலசிங்கம் குழுவினர்,
அராலி

நிகழ்ச்சிகள்:

N R கோவிந்தசாமியின் புதல்வர்கள்	— இணுவில்
N R சின்னராசா புதல்வர்கள்	— இணுவில்
தனித்தவில் K சிவகுமார்	— சங்கானை

இரவு **7** மணி சமயச்சொற்பொழிவு பார்வதி கல்யாணம்
செந்தமிழ் வாகீச கலாநிதி த. குமாரவேல்
ஆசிரியர்

அம்பாள் வீதி, உலா வரும் காட்சியும் இடம்பெறும்.

இங்ஙனம்:
- ஆலய முகாமையாளர்.

பத்திரிகைப் பிரசுரம்:

வீரபத்திரர் ஆலய கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற அம்பாளை வணங்குகின்றோம்.

குமரன் ரெக்ஸ்	— யாழ்ப்பாணம்
துணிப்பூங்கா	— யாழ்ப்பாணம்
சிவபாதம மின் ஒட்டு தொழிலகம்	— சங்கானை
வலம்புரி	— வட்டுக்கோட்டை
கந்தா மாஸ்டர்	— வட்டுக்கோட்டை

(சி-1435)

அரசாங்க அறிவித்தல்

சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம்.

மரத்தளபாடம் வழங்கல்

கீழே விவரிக்கப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் என்னால் 13-06-1995ஆம் திகதி பிற்பகல் 1-30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. வகுப்பு அறை மேசை (விரிவுரை மண்டப மேசை) இலாச்சி அறறது 3' 5'' x 2' x 2' 6''
2. வாசிகசாலை மேசை 6' x 3' x 2' 4½''
3. விரிவுரை மண்டபக் கதிரை (மாணவருக்கு எழுத வசதியுடன்)
4. கதிரை சாதாரணம்
5. கதிரை கைப்பிடி
6. வாங்கு சார்மனை 6' x 18'' x 2' 10''
7. மருந்து ரொலி (இரும்பு)
8. குழந்தைகள் கட்டில்
9. சுழல் கதிரை
10. காரியாலய மேசை 4½' x 2½' x 2½'
11. விளம்பரப் பலகை 4' x 3'
12. றாக்கை 4' x 5' x 1½' (மூன்று தட்டு)
13. பரிசோதனைக் கட்டில்
14. சாதாரண மேசை
15. வைத்தியசாலை லொக்கர்

மேற்படி கேள்விப் பத்திரங்கள் உங்களால் தயாரிக்கப்பட்டு உறையில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்படல் வேண்டும் அத்துடன் அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் ''யாழ் சுகாதார திணைக்களத்திற்கு மரதளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்'' என்று குறிப்பிடப்படல் வேண்டும் இப்பத்திரங்கள் என்னால் 13-06-95ஆம் திகதி பிற்பகல் 2 00மணிக்கு திறக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது சமூகமளிக்கலாம் அல்லது எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை சமூகமளிக்க ஒழுங்கு செய்யலாம். ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விதாரர் ஒரு மாத காலத்திற்குள் பொருள்களை வழங்க வேண்டும். இப்பொருள்களின் மாதிரியைப் பார்வையிட விரும்புவோர் எனது பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும். தளபாடங்கள் யாவும் வேம்பு மரத்தினால் செய்யப்பட்டு இரு தடவை ''வாணிஷ்'' பூசப்படல் வேண்டும்.

வைத்திய கலாநிதி வை. ஸ்ரீ காந்தா,
பதில் சுகாதார சேவைகள்,
மாகாண பிரதிப் பணிப்பாளர்,

மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
57 விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1282)

சின்னஞ் சிறு விளம்பரம்

கடை விற்பனைக்கு

சுன்னாகம் பட்டணசபை பிரதான சந்தியில் இருந்து காங்கேசன்துறைப் பக்கம் மேற்காக (இலக்கம் 9) பெரிய மாடிக்கடையும் இணைந்த பெரிய பண்டசாலையும் 600 சதுர அடி (நாலுகுளி) உரிமைப்படம் இணைந்து உரிமை சேர்ந்திர ஸ்தானம். தொடர்பு: சுப்பையா தியேட்டர் லேன், இணுவில். (8349)

O/L கணிதம்

ஆசிரியர் சச்சிதானந்தனின் மங்களா கல்விச் சேவை வெளியீடுளான சுட்டிகள், மடக்கைகள், விருத்திகள், புள்ளி விபரவியல், திரிகோண கணிதம், சேத்திரகணித ஒழுக்குகளும் அமைப்புகளும் ஆகிய பகுதிகளின் பகுதி I, II வினாக்களும் செய்கைகளும் விற்பனையாகின்றன. (8420)

கடையும் வீடும் தீயில் எரிந்து நாசம்

சாவகச்சேரி நுணாவிலில் வீடொன்றுக்கு இனந்தெரியாதோரால் வைக்கப்பட்ட தீயினால் வீடும் வீட்டுடன் இணைந்த கடையும் முற்றாக எரிந்து நாசமாகின. இதனால் உரிமையாளருக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சாவகச்சேரி காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ–117)

திரிபோஷா வந்தது

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிபிரிவுக்கு ஒரு தொகுதி திரிபோஷா கடந்த செவ்வாய்க்கிழமை வந்து சேர்ந்தது.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் இதனை அனுப்பி வைத்துள்ளது. (ஐ–173)

வாய்க்கால் திருத்தம்

அல்வாய் கிழக்கு வெள்ளுருவை— வட்டுவத்தை வெள்ளவாய்க்கால் சிரமதான முறையில் ஆழமாகத் தோண்டப்பட்டு புனரமைக்கப்பட்டது.

அல்வாய் கிழக்கு கிராமிய உற்பத்திக்குழுவினர் இச் சிரமதானப்பணியை மேற்கொண்டனர். (ஐ–173)

மாதா தேவாலயம் திறப்பு

இளாலி பண்டிதர் குடியிருப்புப் பகுதி மக்களால் அமைக்கப்பட்ட மாதாதேவாலயம் கடந்த 28ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் அதிவண. பிதா தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டு முதல்நாள் திருப்பலி பூஜை நடத்தப்பட்டது. (ச)

பாடசாலைகளில்..

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி 3ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திரு. அ. மு. அருணாசலம் தலைமையில் நடைபெறும். (ச-90)

★ ★ ★

வடமராட்சி, ஜூன் 1 கட்டைவேலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை அதிபர் திரு. த. வரதராசசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. சிவராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ–173)

புதிய
பெரடெனியா
இன்ஸ்ரிரியூட்
கே. கே. எஸ். வீதி
கொக்குவில்
1997 ஆம்
ஆண்டுக்கான
பௌதிகவியல்
திரு. ஜெயசிலன்
ஆரம்பம் யூன்-1
(சி–1434)

9-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 12 — 02 — 1925

மறைவு: 10 — 06 — 1986

அமரர் தம்பு கதிரவேலு

(இளைப்பாறிய அதிபர், யா/ஆ. த. க. பாடசாலை கம்பர்மலை)

திதி: 01 – 06 – 1995

நாளும் பொழுதும் உருண்டோடி ஒன்பது ஆண்டுகள் ஆனது ஐயா!
உள்ளத்தில் உயர்ந்த உத்தமன் நீங்கள் ஐயா!
ஒன்பது ஆண்டுகள் என்ன நாலாயிரம் ஆண்டுகள் சென்றாலும் நாங்கள் உங்களை மறவோம் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"ஆனந்த பவனம்",
திருவத்தம்பை, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(8554)

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 17 — 03 — 1961

உதிர்வு: 12 — 06 — 1994

செல்வி

சௌபாக்கியவதி கந்தசாமி

திதி: 1 – 06 – 1995

வருடம் ஒன்று உருண்டு ஓடினாலும் உங்கள் நினைவுகளை எம் நெஞ்சால் மறக்க முடியவில்லை.
உமது பிரிவால் துயருறும்;

அப்பா, அம்மா, சகோதர,
சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனி மற்றும் உறவினர்கள்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(36852)

2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 02 — 04 — 1942

உதிர்வு: 24 — 05 — 1993

அமரர் தம்பையா இலட்சுமணசாமி

[ஆசிரியர் - சில்லாலை R C.T.M.S.]

திதி: 01–06–1995

ஆண்டு இரண்டு போனாலும்
ஆறாது எமது மனம்
ஆசை அப்பாவே இனி நாம் உங்கள்
அன்பு வதனம் காண்பதெப்போ?

உங்கள் நினைவில் வாடும்,

அன்பு மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு.

[36861]

புதிய பெரடெனியா
இன்ஸ்ரிரியூட்
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

அளவையியல்
திரு. சோதிலிங்கம்
97ஆம் ஆண்டு பிரிவுகளும், 95, 96ஆம் ஆண்டு மீட்டல் வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்: 02 - 06 - 1995

கணக்கியல்
SAM
97ஆம் ஆண்டு பிரிவுகளும், 95, 96ஆம் ஆண்டு மீட்டல் வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்: 02 - 06 - 1995
திங்கள் — 4-30 — 5-30
வெள்ளி — 4.30 — 5-30
[சி-1420]

7-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 13 — 06 — 1939

மறைவு: 18 — 05 — 1988

அமரர் கந்தையா சங்கரசிவம்

[ஆசிரியர்-மிருதங்க வித்துவான்]

திதி 01 – 06 – 1995

எண்குணத்தான் இணையடிகள் அணைந்தவாறு
மென் விரல்கள் மிருதங்கம் மீட்கவன்றோ!
முத்தொளி சேர் முல்லை நகை முறுவல் காண
எப்பிறவி வாய்த்திடுமோ ஏங்குகின்றோம்!

உங்கள் பிரிவால் வாடும்,
தந்தை, குடும்பத்தினர்.

சொம்மந்தறை

(36860)

31-ம் நாள் நினைவஞ்சலி

செல்வி நிஸாலி சர்வானந்தம்

அன்னை மடியில்: 01 — 10 — 1992

ஆண்டவன் கையில்: 02 — 05 — 1995

மாறாத மகளன்பு, நாள்தோறும் உதிக்கிறது
தீராத மனக்கவலை, தினம் எம்மை வதைக்கிறது
சேராத இடம் சேர்ந்தாய், மகிழ்வோமா –
பதைக்கிறது
நேராத கோயிலில்லை, உன் கொடிய விதியை –
மாற்றுவதற்கு
நிஸாலி நீ எம்மை விட்டு நிற்காமல் ஓடி விட்டாய்
ஏறிய விஷம் போல இருக்கிறோம் இடி விழுந்து
மாறாது மாறாது எம் மனத்துயரம் மாறாது
மகளே! எம் மலர் நிஸாலி, மீண்டும் எம்மனை –
வாராயோ

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

31 ஆம் நாள் நினைவு தினமாகிய இன்று (01 - 06 - 1995) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிரியையிலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அப்பா, அம்மா அண்ணாமார்,
குடும்பத்தினர்.

வி. சர்வானந்தம்

[36847]

இ
இணுவை அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார்
தீர்த்த மகோற்சவம்

நாளை: 02–06–1995 வெள்ளிக்கிழமை

வடஈழத்திலுள்ள முன்னணிக் கலைஞர்களின் தவில், நாதஸ்வரக் கச்சேரியைத் தொடர்ந்து மாலை 4–00 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

★ இரவு நிகழ்ச்சிகள் ★

திரு. ஆர். ராதாகிருஷ்ணன்,
திரு. எஸ். கோபிதாஸ்
ஆகியோரின்
இருவயலின் சோலோ

திரு. பொன். சுந்தரலிங்கம்
அவர்களின்
தெய்வீக இசை அரங்கு

அடியார்கள் அனைவரும் அருள்பெற அழைக்கிறோம்.

— தீர்த்த உபயகாரர்கள்.

(36854)

6-ம் ஆண்டு நினைவுகள்

செல்வன் பிறேமகீதன் ஸ்ரீரஞ்சன்

எம்முடன்: 16–02–1985

விண்ணுடன்: 01–06–1989

எமக்கிங்கு வேறொரு தெய்வமே இல்லை கீதன்
நிதமிங்கு உன்னைத் தான் எண்ணுகிறோம்
எம் மகனே எம் செல்வமே பிறேமகீதா?
உன் நினைவு எம்மை விட்டு அகலாதடா

உன் நினைவால் நெஞ்சுருகும்
அன்பு அப்பா, அம்மா,
ஆசைத்தங்கை திவ்வியா
அருமைத் தம்பி, வக்த
அம்மப்பா, அம்மம்மா.

75, (109) அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(8565)

31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 20 — 05 — 1940

உதிர்வு: 02 — 05 — 1995

அமரர்

கார்த்திகேசு கணபதிப்பிள்ளை

(வர்த்தகர் சுன்னாகம்)

புங்குடுதீவு - 08

பாசத்தைப் பொழிந்து தன் உயிர்க்கு மேலாக
-எம்மைக்
காத்து ஆளாக்கிய அப்பாவே!
மாதம் ஒன்று சென்றதப்பா உங்கள் ஆனைமுகம்
-பார்த்து
உற்றதுணை உங்களைப்போல் கிட்டுமோ
உங்களது மறைவை துணைவியரும் பிள்ளைச்
-செல்வங்களும்
உங்களைச் சார்ந்தவர்களும் மறக்க முடியாமல்
-வெதும்புகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் வாழ்நாள் முழுவதும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

இல: 370 கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

(36858)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

முழுப்பூசணியை சோற்றில் புதைக்க...

வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு, மேலும் 10 பொருள்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா இணைப்பதிகாரியின் பிரிகேடியர் பேரில் ஏற்கனவே தடை விதிக்கப்பட்ட 21 பொருள்களுக்கு மேலதிகமாக, பத்துப் பொருள்கள் இப்போது சேர்க்கப்பட்டிருக்கின்றன.

புதிய பொருள்கள் மீதான தடை இம்மாதம் நடுப்பகுதியிலேயே நடைமுறைக்கு வந்துவிட்டபோதிலும், அது குறித்து உத்தியோகபூர்வமாக, வர்த்தமானி மூலம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

வடபகுதிக்கு கொண்டுவரப் படவுள்ள பொருள்கள் மீதான தடை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டாலும் ஒன்றுதான்; அறிவிக்கப்படாவிட்டாலும் ஒன்றுதான். இராணுவம் தான் நினைத்த மாதிரி எந்தப் பொருளைத் தடை செய்தாலும் எவரும் கேட்கப் போவதில்லை.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்த சில நாள்களின் பின்னர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வழங்கிய செவ்வி ஒன்றில், தடை செய்யப்படாத பொருள்களை வடக்கே எடுத்துச் செல்வதனை இராணுவம் தடுத்தாலும் தான் எதுவும் செய்ய முடியாது என்று தெரிவித்திருந்தார்.

ஆகையால் வர்த்தமானி மூலம் அறிவித்தல் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன, இராணுவம் கூறுவது தான் சட்டம் என்ற நிலை உருவாகுவது ஒன்றும் புதியதல்ல.

மேலும் பொருளாதாரத் தடையானது வட்டம் சுற்றி 1991 இன் நிலைக்கு வந்துவிட்டது. அந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம், மொத்தம் 47 பாவனைப் பொருள்களை வடக்கே கொண்டு வர அவசர கால ஒழுங்கு விதிகளின் கீழ் தடை விதிக்கப்பட்டது.

சந்திரிக்காவின் புதிய அரசு, 4-9-1994 தொடக்கம் தடை செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கையை 29 ஆகக் குறைத்தது.

சந்திரிகா மீண்டும்முழு அளவிலான பொருளாதாரத் தடையை நடைமுறைப் படுத்த முடிவு செய்த இவ்வருடம் ஏப்ரல் இருபதாம் திகதி 21 பொருள்களை எடுத்துவரத் தடை விதிக்கப்பட்டது. மேலும் பத்து பொருள்களுக்கு தடை வந்துள்ளதால் மொத்தம் 31பாவனைப் பொருள்களுக்கு இப்போது தடை!

நாளுக்கு நாள் அன்றாடம் நடைபெறும் தாக்குதல் சம்பவங்களில் தமக்கு உண்டாகும் இழப்புகளின் விகிதாசாரத்தில் தடை செய்யப்படும் பொருள்களின் எண்ணிக்கையை இராணுவத்தினர் அதிகரிக்கும் போது உண்மையான எண்ணிக்கை ஐம்பதுக்கு மேல் உயர்ந்து போகிறது!

இதனைத் தான், போர் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல; விடுதலைப்புலிகளுக்கு எதிராக மட்டுமே போர் நடத்துகிறோம் என்று ஜனாதிபதி சந்திரிகா வர்ணிக்கிறார்!

இராணுவத் தாக்குதல்கள் மூலம் மக்களைக் கொல்வதும், பொருளாதாரத் தடை மூலம் மறைமுகமாக மக்களைக் கொல்வதும் ஒன்றுக்கு மற்றது குறைவானது அல்ல.

மோதல் தவிர்ப்பிலிருந்து தாம் விலகிக் கொள்வதாக விடுதலைப் புலிகள் அறிவித்தது தான் தாமதம், தளர்த்தியிருந்த பொருளாதாரத் தடையை முழு அளவில் அறிவித்தவர் சந்திரிகா. அவ்வாறு செய்ததால் விடுதலைப் புலிகள் மீது இராணுவத் தாக்குதல் எதனையும் ஆரம்பிக்க முன்னர் தமிழ் மக்கள் மீதே சந்திரிகா தாக்குதல் தொடுத்தார்! அதனைத் தொடர்ந்து இராணுவம் தமிழர்களைக் கிழக்கில் இனப்படுகொலை செய்யத் தொடங்கியது.

இதற்குப் பின்னரும்; தமிழர்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துக் காட்டி, தமிழர்களுக்கு எதிராகப் போர் நடத்தவில்லை என்று சந்திரிகா கூறுவது முழுப்பூசணிக்காயை சோற்றில் புதைக்க முயலும் முட்டாள்தனமாகும்!

யுத்தச்செலவுகளைச் சமாளிக்க

நுகர்வுப் பொருள்கள் மீது வரியை அரசு உயர்த்தும்

கொழும்பு, ஜூன் 1

அதிகரித்து வரும் போர்ச் செலவினங்களை சமாளிக்கும் பொருட்டு, நுகர்வுப் பொருள்கள் மீதானவரிகளை உயர்த்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

தற்போது போர்ச் செலவுகளை ஈடுகட்டுவதற்கு போதுமான நிதி திறைசேரியில் இல்லை.

இதனால் புதிய பல வரிகளை பொருள்கள் மீது விதித்து, அதன் மூலம் தனது போர்ச்செலவுகளை மக்கள் மீது சுமத்த அரசு முயன்றுள்ளது.

ஏற்கெனவே நுகர்வுப் பொருள்மீது சாதாரண வரி தவிர பாதுகாப்பு வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை நேரடியாக மக்களிடம் நன்கொடைகளை கோரும் துண்டுப் பிரசுரங்களும் அரசினால் வெளியிடப்பட்டுள்ளது (ஐ-5)

அதிபர் சங்க கூட்டம்

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகள் அதிபர்கள் சங்கத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் மே28ஆம்திகதி சங்கத் தலைவர் சி. துரைராசா தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விக்கோட்ட பிரதிப்பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்து கொண்டார்.

(ஈ)

ஹொரவப்பொத்தானை பகுதியில்

சீருடை தரித்த இளைஞர் ஏற்படுத்திய பரபரப்பு

கொழும்பு, ஜூன் 1

இனந்தெரியாத நான்கு இளைஞர்கள் ஹொரவப் பொத்தானை பகுதிக்கு வந்து பெண் ஒருவரிடம் தண்ணீர் கேட்டு வாங்கி அருந்திச் சென்றதாக தகவல் வெளியானதை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பொலிஸாருக்கும் தகவல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவமும், பொலிஸாரும் கூட்டாக இரவு பகலாக தேடுதல்களை மேற்கொண்டனர்.

இந்த தேடுதல் நடவடிக்கை ரத்மல்ஹ காடுகளில் தொடர்ந்து இரண்டு நாட்கள் மேற்கொள்ளப்பட்டது.

அந்த இளைஞர்கள் சீருடை அணிந்திருந்ததோடு, தொப்பியும் அணிந்திருந்தனராம்.

இச்சம்பவம் தொடர்பாக ஊரில் பல வதந்திகளும் பரவின.

மாலை 5 மணியளவில் கடைகள் யாவும் இழுத்து மூடப்பட்டன.

அந்த இளைஞர்கள் ஆயுதங்களுடன் நடமாடியதை தாம் கண்டதாகவும் சிலர் தெரிவித்தனர்.

அதனை அடுத்து ஹொரவப்பொத்தானை பொலிஸாருக்கும் தகவல் அனுப்பப்பட்டது ஹொரவப்பொத்தானை பொலிஸார் கலன்பிந்தனுவெவ, கஹட்டகஸ்திகிலிய, மதவாச்சி ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்து சுமார் 400 பொலிஸ், இராணுவ கூட்டு அணியை வரவழைத்து இக்கிராமத்தை முற்றுகையிட்டனர்.

மிகத் தீவிரமாக தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் சந்தேகத்திற்கு இடமானவர்கள் எவரையும் படையினரால் கைதுசெய்ய முடியவில்லை. (ஐ-5)

நாட்டை விட்டு வெளியேற விமானிகளுக்குத்தடை

கொழும்பு, ஜூன் 1

விமானப்படையைச் சேர்ந்த விமான ஓட்டிகள் நாட்டைவிட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கும், விமான நிலையப் பாதுகாப்பு பிரிவுக்கும் இது குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் விமானங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமது உயிரை இழக்க விரும்பாத சில விமான ஓட்டிகள் நாட்டைவிட்டு வெளியேற முயற்சி செய்வதாக கிடைத்த தகவலே இத் தடைக்கான காரணம் ஆகும்.

இதேவேளை— கடந்த மூன்று வார காலத்தினுள் சொந்த லீவில் தமது வீடுகளுக்குச் சென்ற கனிஷ்ட இராணுவ அதிகாரிகள் பலர் லீவு முடிவடைந்த பின் மீண்டும் வேலைக்கு சமுகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மீண்டும் மோதல் தொடங்கியதை அடுத்து வடக்கு-கிழக்குக்கு இடமாற்றம் செய்யப்பட்ட— நூற்றுக்கணக்கான பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமக்குரிய பொறுப்புகளை ஏற்கவில்லை எனவும் தெரிய வந்துள்ளது.

இவர்கள் சுகயீன விடுமுறை விண்ணப்பங்கள் அனுப்பி விட்டு வீட்டில் இருப்பதாகவும் தெரிகிறது. (ஐ)

புலிகளின் குரல் வானொலியில்

வியாழன் இரவு

01 — 06 — 1995

★ 8-2 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — நோய் தீர்க்கும் மூலிகைகள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் 'பொருண்மியமேம்பாடு காண்போம்' சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — யாழ். பொது நூலக எரிப்பு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி தாமரைச்செல்வி எழுதிய ''சாம்பலில் உயிர்த்தெழும் ''பீனிக்ஸ் பறவையாய்''

02 — 06 — 1995

வெள்ளி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7 40 — தாயகப் பாடல்கள்

தமிழீழ வானொலியில்

வியாழன் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-05 — எழுச்சிக் கீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — இசையும் கதையும்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-2 — பொன் விளையும் பூமி
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 —கேள்வி — பதில்

சிறுவர் நூல் வெளியீடு விழா

கவிஞர் சத்தியசீலனின் ''அண்லாரே'' சிறுவர் பாடல் நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரபல ஓவியர் ரமணிக்கு ''ஓவிய வண்ணன்'' என்ற விருது வழங்கப்பட்டதுடன் அவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், கவிஞர் சோ. பத்மநாதன், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. சி. கேசவராசன், ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை முதல்வி திருமதி சோமலிங்கம் ஆகியோர் விழாவில் கவிஞரைப் பாராட்டிப் பேசினார்கள்.

நூலின் முதற் பிரதியைக் 'கங்கா' என்ற பிறஸ் நிறுவன அதிபர் திரு. கனகரெத்தினம் பெற்றுக் கொண்டார். [ஈ]

தையல் பொருள் கண்காட்சி

தென்மராட்சி ஜூன் 1

கைதடி நாவற்குழி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பு மாணவிகளால் உருவாக்கப்பட்ட தையல் பொருள்களின் கண்காட்சி அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் திறந்து வைக்கப்பட்டது.

இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவிகளுக்கு பயிற்சிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (க)

மருத்துவ நிலைய திறப்பு விழா

நல்லூர் பண்டாரமாளிகை வளவினுள்ள மாநகரசபை அலுவலக வளவினுள் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற சித்த மருத்துவ நிலையத் திறப்புவிழா நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல்3 மணிமுதல் நடைபெறும்.

மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். [ஈ]

செஞ்சிலுவை அதிகாரி விஜயம்

ஜெனிவாவில் இருந்து இங்கு வந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி மொனோ யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள குறைபாடுகளைத் தெரிந்து கொண்டார்.

அவர் வைத்தியசாலையின் சகல பிரிவுகளையும் சென்று பார்வையிட்டதுடன் உயர் மட்ட உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்களும் நடத்தினார். (க-5-15)

தமது கோரிக்கையை வலியுறுத்த

நாடாளுமன்றின் நடுவே படுத்திருந்தார் எம். பி.!

புதுடில்லி, ஜூன் 1

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தின் மையப் பகுதிக்கு வந்து படுத்துக் கொண்ட நிகழ்வு நேற்று ஏற்பட்டது.

இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினரான திரு. சி. கே. குப்புசுவாமியே இவ்வாறு நடந்து கொண்டார்.

மேட்டூர் அணைக்குஉடனடியாகத் தண்ணீர்விட வேண்டும், மேட்டூர் அணையின் நீர் மட்டம்வெகுவாகக் குறைந்து விட்டது. மக்கள் போதிய தண்ணீர் இன்றி அவதிப்படுகிறார்கள் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

தம்முடைய கோரிக்கையை வலியுறுத்தவே அவர் நாடாளுமன்ற மையப்பகுதிக்கு வந்து படுத்துக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஈ)

சூழல் பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 1

உலக சூழல் பாதுகாப்பு தினம் எதிர்வரும் ஐந்தாம் திகதியாகும்.

இதனை ஒட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உலக இயற்கைச் சூழலோடு ஒட்டியதே எமது வாழ்க்கை. இயற்கை சூழலை அழித்து மனிதன் வாழமுடியாது. சூரிய குடும்பத்தில் புதனிலும் வெள்ளியிலும், உயிரினங்கள் இல்லாமல் அழிந்தது போல் பூமியிலும் ஏற்படக்கூடாது.

இதனைக் கருத்திற் கொண்டு சூழலை பாதுகாக்கும் நோக்குடன் இன்று உலக நாடுகள் ''உலக சூழல் தினத்தை'' பிரகடனப்படுத்தியுள்ளன. இத்தினம் வருடம் தோறும் ஜூன் மாதம் 5 ஆம் திகதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

எனவே தமிழீழ மக்களாகிய நாமும் உலகோடு இணைந்து செயற்படுவோம். தமிழீழத்தில் உள்ள பாடசாலைகள் பொது அமைப்புகள் நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், கருமபீடங்கள் மற்றும் தனியார் ஸ்தாபனங்கள் அனைத்தும் அன்றைய தினத்தில் சூழல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்பு பகுதி கேட்டுக் கொள்கின்றது — என்று உள்ளது (ஐ-க)

திறப்புவிழா

மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வகுப்பறை மண்டபங்களான மாவீரர்கள் மாதவன் மண்டபம், டெனிக் மண்டபம் ஆகியன புனரமைப்பு செய்யப்பட்டு திறப்புவிழா நிகழ்வுகள் கடந்த மே 19 ஆந் திகதி அதிபர் அ. க. சிவசம்பு தலைமையில் நடைபெற்றன.

பூமியை விட 300 மடங்கு பெரியது:

சூரிய மண்டலத்துக்கு வெளியே புதிய கிரகம்!

கொழும்பு. ஜூன் 1

வியாழனைப் போல 20 மடங்கும், பூமியை விட 300 மடங்கும் பெரியதான கிரகம் ஒன்று, சூரிய மண்டலத்திற்கு வெளியே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சூரிய மண்டலத்திற்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது கிரகம் இதுவே ஆகும்.

இவ்வாறு சூரிய மண்டலத்திற்கு வெளியே கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது உலகை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

பூமியிலிருந்து 90 ஒளியாண்டு தூரத்தில் ஹெச்டி 114762 என்ற நட்சத்திரம் இருக்கின்றது.

இந்த நட்சத்திரத்தையே, புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட கிரகம் 84 நாள்களுக்கு ஒரு தடவை சுற்றி வருகிறது.

இப் புதிய கிரகத்தின் ஒளி மிகமிக மங்கலானதால் இதனை பூமியில் உள்ளவர்கள் தொலை நோக்கி மூலம் கூட பார்க்கமுடியாது.

ஹெச்-டி 114762 நட்சத்திரத்தைப் பயன்படுத்தி ஓக்ரிட்ஜ் [Oakridge] வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் டாக்டர் டேவிட் லாத்தம் என்பவர் பரிசோதனைகள் சிலவற்றை மேற்கொண்டிருந்தார்.

அப்போது இக் குறிப்பிட்ட நட்சத்திரம் நடுங்குவதைக் கண்டார்.

நட்சத்திரத்தைச் சுற்றிவரும் கிரகம் ஒன்றின் ஈர்ப்பினால் தான் இப்படி நடுக்கம் ஏற்படும்.

இதனை வைத்து புதிய கிரகத்தைக் கண்டுபிடித்த அவர், இந்த புதிய கிரகம் பூமியைவிட 300 மடங்கு பெரிதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

இதனை, சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த வானியல் ஆராய்ச்சி நிபுணரான டாக்டர் மைக்கேல் மேயர் என்பவரும் தமது பரிசோதனையில் கண்டு பிடித்துள்ளார்.

இந்த கிரகத்தின் மேற்பரப்புல் வெப்பம் அதிகமாக இருப்பதனால் இங்கு உயிரினங்கள் எதுவும் வசிக்க முடியாது என தெரிவிக்கப்படுகிறது

எனினும் இப் புதிய கிரகம் பற்றிய வேறு தகவல்கள் கிடைக்கவில்லை. [ஐ-5]

காணாமற் போனவர்களின் இறப்பு பதிவுகள்: பிரதேச செயலாளர்களுக்கு முழு அதிகாரம்

செய்திக் கட்டுரை

நாடு முழுவதும் காணாமல்போனவர்களை இறந்தவர்களாக பதிவு செய்வதற்கு இன்றைய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

1995 — இல. 2 கொண்ட இறப்பு பதிவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 05-01-1995 இல் இருந்து இரண்டு வருடங்களுக்கு செல்லுபடியாகும். இந்தச் சட்டம் அமுலில் இருக்கும் காலத்தில் யாழ். மாவட்டத்தில் காணாமற்போயுள்ள சுமார் 2 ஆயிரம் பேரையும் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வன்செயல் நடவடிக்கைகள் காரணமாக காணாமற்போயுள்ள நபர்களின் இறப்புக்களை பதிவு செய்வதற்குரிய இச்சட்டத்தின் கீழ் காணாமல்போயுள்ள நபர் வாழ்ந்த பிரதேச செயலாளர்கள் இறப்புக்களை பதிவு செய்வதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பதிவாளர் நாயகத்துக்கு விண்ணப்பத்தினை அனுப்பினால் பதிவாளர் நாயகம் பதிவு செய்வதற்கு அந்த அந்தப் பிரிவு பதிவுகாரர்களுக்கு அங்கீகாரம் வழங்குவார்

ஆகவே பிரதேச செயலாளர்கள் நபர் ஒருவரின் இறப்பினை பதிவு செய்வதற்கு பதிவாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதுடன் தமது அங்கீகாரத்தையும் வழங்க வேண்டும். பிரதேச செயலாளர்கள் அங்கீகாரத்துடன் பதிவாளரது பெயர், பதிவுப் பிரிவு முகவரி என்பவற்றையும் பதிவாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டியது அவசியம் ஆகும்.

நெருங்கிய உறவினரே விண்ணப்பிக்கலாம்

காணாமல்போன நபர் ஒருவரின் இறப்பை பதிவு செய்வதற்கு இச்சட்டத்தின் கீழ் காணாமற்போன ஒருவரின் நெருங்கிய உறவினர் ஒருவரே காணாமற்போன நபர் வசித்த பிரதேச செயலாளருக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். விண்ணப்பப்படிவம் பிரதேச [illegible] மனையில் பெற்றுக் [illegible] வேண்டும். இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் யாவற்றையும் தெளிவாகக் குறிப்பிட்டு இந்த விண்ணப்பத்துடன் சத்தியக்கூற்று, கிராம அலுவலரின் அறிக்கை ஆகியவற்றுடன் விண்ணப்பத்தை கையளித்தால மட்டும் பிரதேச செயலர் ஏற்றுக் கொள்வார். சத்தியக்கூற்று கிராம அலுவலரின் அறிக்கை ஆகியவற்றின் மாதிரிகள் பிரதேச செயலகப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் — இணைப்பு 01, சத்தியக்கூற்று — இணைப்பு 02, கிராம அலுவலரின் அறிக்கை — இணைப்பு 03 ஆகிய மூன்று இணைப்பு படிவங்களுடன் மட்டுமே பிரதேச செயலர் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வார்.

முழு அதிகாரம்

பிரதேச செயலாளர்களுக்கு பதிவாளர்நாயகம் விண்ணப்பங்களை பொறுப்பேற்றல், விசாரணை நடத்துதல், இறப்புக்கள் பதிதலை அங்கீகரித்தல் ஆகிய கடமைகளை மேற்கொள்வதற்கு முழு அதிகாரம் வழங்கியுள்ளார்.

விண்ணப்பங்களை [illegible] பெற்ற பிரதேச செயலாளர் [illegible] கடமைகளையும் மேற் கொண்ட பின்பு காணாமற்போன நபர் தொடர்பாக எதிர்ப்புக்கள் ஏதும் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டால் விசாரணை நடாத்தி காணாமற்போன நபர் தொடர்பாக பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் பகிரங்க காட்சிக்கு இட்ட பின்னர் பகிரங்கப்படுத்தப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாதம் முடிந்த பின்னர் விசாரணை நடத்த வேண்டும். விசாரணைக்கு விண்ணப்பதாரர் அப்பகுதி கிராம அலுவலர், காணாற்போன நபரின் விவரங்களை அறிந்த மற்றும் ஒருவர் ஆகியோரை அழைக்க வேண்டும். விசாரணையின் பின்னர் பிரதேச செயலாளர் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பதிவாளர் நாயகத்துக்கு அனுப்பி வைப்பார்.

இதன் பின்னர் —

வி.ரி.கதிர்காமநாதன்

பதிவாளர்நாயகம் பிரதேச செயலாளர் குறிப்பிட்டு எழுதும் பதிவுகாரருக்கு இறப்பினை பதிவு செய்வதற்கு அனுமதி வழங்குவார்.

(ஐ-)

பண்ணோடு பரமனை பாடின் உயர்வு பெறலாம்

திருமுறை விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 1

இறைவனை அவனது நாமங்களை உச்சரிப்பதன் மூலம் எங்களுக்கு அருகில் கூட்டி வரலாம் அவன் அருளையும் பெறலாம்.

இறைவனைத் துதி செய்யும் தேவாரம் மற்று திருமுறைகளைபண்ணோடு பாடுவதால் அவனை இசைவிக்கலாம். நாமும் பக்தி வெள்ளத்தில் மூழ்கித் திளைக்கலாம் பரமனைப் பண்ணோடு பாடி உயர்வு பெறலாம்.

இவ்வாறு தெரிவித்தார் சுவாமி சித்ருபானந்தா.

பருத்தித்துறை ஸ்ரீராமக்கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் கடந்தபூரணை தினத்தில் திருமுறை விழா நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக பண்ணிசைத் துறை இணைப்பாளர் நா. வி. மு. நவரத்தினத்தின் திருமுறைப் பண்ணிசை அங்கு நடைபெற்றது.

விழாவைத் தொடக்கி வைத்துப் பேசிய சுவாமிகள்— வசவசமயத்தவர்கள் திருமுறைகளை பண்ணோடு பாட வேண்டும். ஆலயங்கள், வீடுகள் பாடசாலைகள் தோறும் அந்தப் பழக்கம் பரவ வேண்டும் என்று விரும்பியவர் சேர். பொன். இராமநாதன்.

இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மூலம் அவரின் கனவு நனவாகியுள்ளது மகிழ்ச்சிக்கு உரியதாகும் — என்றும் குறிப்பிட்டார்.

விழா நிறைவில் சகல கலைஞர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

[ஈ]

கூட்டுறவு ஒன்றிய நடவடிக்கை

வடமராட்சி கூட்டுறவு ஒன்றியம் கொழும்பிலிருந்து கப்பலில் பொருள்களை எடுத்துவர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இக் கூட்டுறவு ஒன்றியத்தின் வடமராட்சிப் பகுதியிலுள்ள மருதங்கேணி, பருத்தித்துறை, புலோலி, நெல்லியடி— கட்டைவேலி, உடுப்பிட்டி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. (க-173)

வடகோவை

ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில்

கொடியேற்ற உற்சவம்

இவ்வருடம் கொடியேற்ற மகோற்சவம் 3.6.95 சனிக்கிழமை காலை 11 மணிக்கு வழமைபோல் ஆரம்பமாகும்.

சி. சுந்தரம் ஆசிரியர் குடும்பத்தினர்
[கொடியேற்ற உபயகாரர்]

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

[36884]

மரண அறிவித்தல்கள்

திருமதி அருந்ததிதேவி பத்மநாதன்

(பேபி)

கோண்டாவில் குமரகோட்டத்தைச் சேர்ந்த திருமதிஅருந்ததிதேவி பத்மநாதன் காலமாகிவிட்டார். இவர் அமரர் திரு. வைத்திலிங்கம்— மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், பத்மநாதனின் அன்பு மனைவியும், பத்மஸ்ரீ (போராளி), நிரஞ்சன் (ஜெர்மனி), அகிலன் [கொக்குவில் இந்துக் கல்லூரி], கார்த்திகா [கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்], ஆகியோரின் அருமைத் தாயாரும், அமரர் சின்னத்தம்பி— சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், வி. சோமசுந்தரத்தின் பாசமிகு மருமகளும், திருமதி பர்வதவத்தினிதேவி அம்மா, சரவணபவன்(ஜெர்மனி), பவானந்தன் [லண்டன்], திருமதி சோலதநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சரஸ்வதி, பாலசிங்கம், திருமதி புவனேஸ்வரி. அமரர் இராஜேஸ்வரன், திருமதி அம்பிகாதேவி, திருமதிபுஷ்பராணி, நடராசா ஆகியோரின் மைத்துனியும். கந்தையா, தம்பிராசா, திருமதி ஞானேஸ்வரி, ஆகியோரின் சகலியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் குமரகோட்டம், கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் வியாழக்கிழமை [1. 6. 95] மாலை 4 . 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்
சி. பத்மநாதன்
(கணவன்)

குமரகோட்டம்
கோண்டாவில்.

36882

திருமதி பாக்கியம் கந்தையா

திருமதி பாக்கியம் கந்தையா நேற்று (31-5-95) காலமாகிவிட்டார்.

இவர் குமரகோட்டம், கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், சிவபாதம் (ஜேர்மன்), சிவலிங்கம் [ஜேர்மன்), கமலாதேவி, சறோஜினிதேவி (ஜேர்மன்), சற்குணதேவி, நவமலர்தேவி (ஜேர்மன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், சந்திரசேகரம், தங்கரத்தினம் (ஜேர்மன்], காலஞ்சென்ற சண்முகரத்தினம் (கட்டுவன்) மற்றும் கிருஷ்ணமூர்த்தி (சுவிஸ்), விக்னேஸ்வரி [ஜேர்மன்), காலஞ்சென்ற பரஞ்சோதி [ஜேர்மன்] ஆகியோரின் மாமியாரும், சந்திரமோகன் [கனடா], கௌசனா, மேகலா, சசிகலா, நிறஞ்சன், சயந்தன், கவிதா, சுதர்ஷன், சுகிர்தரன், சுஜீபா, சுஜீபன், சுஜித்தா, சங்கீதா, பபிகரன், கஸ்தூரி, குமீரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (1-6 95) வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. சந்திரசேகரம்
(மருமகன்]

குமரகோட்டம்,
கோண்டாவில்.

(36883)

சின்னத்தம்பி விநாயகமூர்த்தி

(முன்னாள் பிரதம கணக்காளர், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு)

அராலி தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பு அன்டர்சன் தொடர்மாடியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சின்னத்தம்பி விநாயகமூர்த்தி அவர்கள் நேற்று காலை காலமாகிவிட்டார்.

இவர் இராசமணியின் அன்புக் கணவரும், Dr குகதாஸ் (யாழ். போதனா வைத்தியசாலை), வனிதா, தேவதாஸ் (கணக்காளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr திருமதி குகதாஸ் (யாழ் போதனா வைத்தியசாலை). ஈஸ்வரகுமார் (கனடா), வாசுகி [சட்டத்தரணி] ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதர்ஷன், தர்ஷனா, சாந்தலா, தினேஷ் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1- 6 - 95] வியாழன் பிற்பகல் 3. 30 மணியளவில் அவரது கொழும்பு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
Dr. வி குகதாஸ்
(மகன்)

123. ஐயனார் கோவில் வீதி.
யாழ்ப்பாணம்.

[36885]

சுகாதார சீர்கேடு நிலவும்

கொத்து ரொட்டி கடைகளில் திடீர் சோதனை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

சுகாதார சீர்கேடான முறையில் கொத்துரொட்டி தயாரிப்பில் ஈடுபட்டுவரும் கொத்து ரொட்டிக் கடைகள் மீது தமிழீழ சுகாதாரபரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்ற சனிக்கிழமை மட்டும் யாழ்ப்பாணம், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது 15 கொத்துரொட்டிக்கடைகளில் சுகாதாரசீர்கேடான முறையில் தயாரிக்கப்பட்ட ரொட்டிகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

வீதிக்கு அருகில் வைத்து சுகாதார சீர்கேடான முறையில் தயாரிக்கப்படும் கொத்து ரொட்டிக்கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று கடந்த ஒரு மாத காலத்தின் முன்பு தமிழீழ சுகாதார சேவைகள் பகுதியினர் அறிவித்திருந்தமை தெரிந்ததே. இதற்கு அமைவாகவே தற்போது திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட் 15 கொத்து ரொட்டிக் கடை உரிமையாளர்கள் மீதும் தமிழீழ சுகாதார சேவைகள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன். 1

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தீவக ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்துள்ள சிநேகபூர்வ உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2. 30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

உதைபந்தாட்டத்தில் — ஊர்காவற்றுறை கோட்ட ஆசிரியர்கள் அணியை எதிர்த்து ஊர்காவற்றுறைக் கோட்டமாணவர் அணியும்—

வலைப்பந்தாட்டத்தில் ஊர்காவற்றுறைக் கோட்ட ஆசிரியைகள் அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை கோட்டமாணவிகள் அணியும் மோதவுள்ளன. (ஐ)

★ ★ ★

தென்மராட்சி, ஜூன். 1

மட்டுவில் மோகனதாஸ்சன சமூக நிலையத்தினால் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழன் பிற்பகல் நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு;

★ பி. ப 3 மணி — சாவகச்சேரி ஸ்ரீதாஸ் வி. க. எதிர் புத்தூர் கலைமதி வி. க

★ பி. ப 4 மணி — புத்தூர் வளர்மதி வி. க. எதிர் வல்வெட்டி ஆதிசக்தி வி. க. [ஐ-117]

★ ★ ★

வண. சகோதரர் ஹில்லறி ஜோசப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் லாசாலா சகோதரர்கள் சபை நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு;

★ 3 மணி— ஜொனியன்ஸ் 'ஏ' அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி

★ 4 மணி — பற்றீசியன் அணி எதிர் ஓல்ட்கோல்ட் அணி [உ-3]

தாவரவியல் போட்டி பரீட்சை

அமரர் வ. சின்னத்தம்பி ஞாபகார்த்தப் பரிசிலுக்கான தாவரவியல் போட்டிப் பரீட்சைத்தொடரில் பத்தாவது பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்

பரீட்சைஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பரீட்சை நிலையங்களிலும் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. (க-15)

இஸ்ரேலின் புதிய ஏவுகணை

றேடார் கருவிகள், ஏனைய ஆகாயப் பாதுகாப்பு அமைப்புகள் ஆகியவற்றைத் தாக்கக்கூடிய ஏவுகணை ஒன்றை இஸ்ரேல் அடுத்த மாதம், அறிமுகப்படுத்த இருக்கிறது.

இந்த ஏவுகணை ஆகாயத்திலிருந்து பூமிக்கு செலுத்தப்படக்கூடியது.

பாரிஸ் நகரத்தில் ஒரு வாரம் நடைபெறவிருக்கும் விமானக் கண்காட்சியின் போது ''தினை[illegible]'' இந்த ஏவுகணை காட்சிக்கு வைக்கப்படும் [illegible] செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (க)

தொலைக்கல்வி அமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 1

கோப்பாய் தொலைக்கல்வி நிலையத்தின் 93-95 பிரிவினருக்கான தொழில்சார் கல்வி வழிகாட்டல் அமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற உள்ளது. (ஐ)

தேரருக்கு ஜே.ஆர் புகழாரம்!

கொழும்பு, ஜூன். 1

காலஞ்சென்ற திம்புலாகல சிலாலங்கார தேரரின் பெயர் இலங்கை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா முன்கண்டவாறு புகழாரம் சூட்டியுள்ளார். (ஐ-6)

ஆத்மஜோதி முத்தையா கனடா பயணம்

சுழிபுரம், ஜூன் 1

''ஆத்மஜோதி'' திரு நா. முத்தையா கனடாவுக்கு செல்லவுள்ளார். அங்குள்ள சைவ அன்பர்களின் அழைப்பை ஏற்று செல்லும் அவர் அங்கிருந்து ஆஸ்திரேலியா நாட்டுக்கும் சென்று நாடு திரும்புவார். (க-28)

காலாவதியான பொருள்கள்

சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான பால்மா பக்கட்டுகள் தகரத்தில் அடைக்கப்பட்ட பால் (ரின்மில்க்) போன்றன சாவகச்சேரி நகர்ப்பகுதி பொது சுகாதார பரிசோதகரால் அண்மையில் கைப்பற்றப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன.

ப. நோ. கூ. சங்க ஆதரவில்

உயர்தர மாணவருக்கு பாட கருத்தரங்குகள்

வடமராட்சி கிழக்குப் பிரதேச உயர்தர கலை, வர்த்தக மாணவர்களின் வசதி கருதி, மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இம்மாத இரண்டாம் வாரத்தில், உடுத்துறை மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகும் இக்கருத்தரங்கில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள பாடசாலை, தனிப்பட்ட உயர்தர கலை வர்த்தக மாணவர்கள் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விசேட ஆசிரியர்களினால் தொடர்ச்சியாக ஒரு வாரத்துக்கு மேல் நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்கினை உடுத்துறை மகாவித்தியாலயம் ஏற்பாடு செய்துள்ளது. (ஐ-173)

யாழ். மாவட்ட ஆசிரியருக்கு

புதிய சம்பளத்தை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன். 1

யாழ் மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் —

ஜூன் மாத சம்பளப் பட்டியலில் புதிய சம்பளத் திட்டத்துக்கு அமைவான சம்பளத்தையும் —

ஜனவரிமுதல் வழங்கவேண்டிய பாக்கிச் சம்பளத்தையும் —

வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் நேற்று அனுப்பிய கடிதத்திலேயே இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அயல் மாவட்டமான கிளிநொச்சி மாவட்டத்தில் மே மாதத்திலேயே புதிய சம்பளமும், பாக்கிப்பணமும் வழங்கப்பட்டுள்ளது என்பதை அவர் தமது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழக மீனவர் விவகாரம்; மௌனம் சாதிக்க முடியாது

முதல்வர் ஜெயலலிதா அறிக்கை

தமிழக மீனவர் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக, தொடர்ந்தும் இந்தியா மௌனம் சாதிக்க முடியாது என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

மே மாதம் 20 ஆம் திகதியும் தமிழக மீனவர் ஒருவர் கச்சதீவுக்கு அருகில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இத்தகைய சம்பவங்களை [illegible] தடுக்க வேண்டும் எனக்கோரி கடந்த 19 ஆம் திகதி பிரதமருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளேன்.

தமிழ்நாட்டின் ஏழு கடற்படைப் பிரிவுகள் இயங்க அனுமதி வழங்குமாறு பிரதமரைக் கேட்டிருக்கிறேன்.

மாநில அரசினால் சிபார்சு செய்யப்பட்ட கரையோரப் பாதுகாப்புத் திட்டத்திற்கான அங்கீகாரத்தையும் மத்திய அரசிடம் இருந்து கோரியுள்ளோம்'

இவ் விடயம் தமிழ் நாட்டு மக்களிடையே பதற்ற நிலையை தோற்றுவித்து இருப்பதால், இது குறித்து காத்திரமான நடவடிக்கைகளை உடனே எடுக்கும்படி மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு ஜெயலலிதா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஐ-5)

★ மீண்டும் இஸ்ரேலுடன் தொடர்பா?

ஒரு நிமிடம் கூட அரசில் சேர்ந்திருக்க மாட்டோம்!

எச்சரிக்கிறார் அஷ்ரப்

கொழும்பு, ஜூன் 1

இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை அரசு ஏற்படுத்துமானால் அதன் பின் ஒரு நிமிடம் கூட அரசில் இணைந்திருக்கமாட்டோம்.

— முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னர் இஸ்ரேல் அரசு ஐ. தே. க. அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மறைமுகமாக ஆயுத உதவிகளை வழங்கி இனப்போரை ஊக்குவித்து வந்தது என்றும் அமைச்சர் அஷ்ரப் அந்தப் பேட்டியில் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய புலனாய்வுத் துறையின் முன்னாள் அதிகாரி ஒருவர் எழுதி வெளியிட்டுள்ள போர் தொடர்பான நூல் ஒன்றில் இந்த விவரம் வெளியாகி உள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பயன்படுத்த இஸ்ரேலிடம் இருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் அதனுடன் ராஜதந்திர உறவுகளை அரசு ஏற்படுத்திக் கொள்ள இருப்பதாக கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களில் பரவலாக பேசப்பட்டுவரும் வேளையில் அமைச்சர் அஷ்ரப் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

புலிகளின் தற்கொலைப் படைக்கு இடமளிப்போர் துரோகிகளாம்!

தென் மாகாண முதலமைச்சர் சாடுகிறார்

கொழும்பு, ஜூன் 1

வடபகுதியில் இருந்து கொழும்பு வரும் தற்கொலைப் படையினருக்கு சிங்களவர்களே கூடிய வாடகைக்கு வீடுகளை கொடுக்கின்றனர். இத்தகையவர்களுக்கு தேசத்துரோகிகள், சமூகத்துரோகிகள் போன்ற பட்டங்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு சாடியுள்ளார் தென் மாகாண முதலமைச்சர் மஹிந்தயாப்பா அபேவர்த்தன.

தென் மாகாண சபையின் மாதாந்த கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில் அபிவிருத்தி அதிகார சபை மசோதாவின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே முதல் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிலையில் தெற்கில் களியாட்டங்கள் நடைபெறுகின்றன.

இதையிட்டு தெற்கிலுள்ள பெரும்பாலானோருக்கு கவலையே இல்லை.

வடக்கு - கிழக்கில் நடைபெற்று வரும் இந்த யுத்தம் இன்றோ, நாளையோ முடியப் போவதில்லை.

யுத்தம் 4 ஆண்டுகள் நீடிக்கும்

குறைந்து இந்த யுத்தம் முடிவடைய இன்னும் நான்கு அல்லது ஐந்து வருடங்கள் செல்லும்.

இந்த யுத்தத்தை வெற்றிகொள்ள தொழிலாளர், படித்தோர், இளைஞர், விவசாயிகள், வைத்தியர்கள் முதல் வயோதிபர் வரை அனைத்து தரப்பினரதும் பூரண ஒத்துழைப்பு தேவை.

நாம் இந்த நிலைமை பற்றி ஏனோதானோ என்று இருந்து விட்டால் இறுதியில் பெரும் சேதங்களையே எதிர்நோக்க நேரிடும்,

வெள்ளையரின் வெற்றிக்காக இரண்டாம் உலக யுத்தத்தில் உழைத்த நாம், அதே போல் எமது நாட்டை பாதுகாப்பதற்காக ஏன் உழைக்கக் கூடாது?

இரண்டாம் உலக யுத்தத்திற்காக வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி எப்படி உழைத்தோமோ அதைவிட பெரும் தியாகங்களை எமது நாட்டை பாதுகாப்பதற்காக செய்ய நாம் ஏன் முன்வரக் கூடாது?

தானியக் களஞ்சியங்களிலே தானியங்களை சேமிக்க வேண்டும்; எரிபொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்தி சேமிக்க வேண்டும்.

தொழிற்சாலைகளில், அரசாங்க அனுமதி பெற்று ஆயுதங்களை கூடிய அளவு தயார் செய்ய வேண்டும்.

நாமே ஆயுதங்கள் செய்வோம்

யாழ். மக்கள் அங்குள்ள தொழிற்சாலைகளில் தமது சக்திக்குட்பட்ட வரை தமக்குத் தெரிந்த ஆயுதங்களை தயாரிப்பதை நான், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் கடமையாற்றிய போது அறிய முடிந்தது. அதே போல் எமது பகுதியில் ஆயுதங்களை தயாரிக்க வேண்டும்; வெளிநாடுகளில் இருந்து மட்டும் ஆயுதங்களை தருவித்தால் போதாது.

இந்த யுத்தத்தில் வெற்றி கிட்ட இளையோரின் பங்களிப்பு மட்டுமன்றி, முதியோரின் பிரார்த்தனைகளும் எமக்குத் தேவை.

— இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ-5)

வடக்குக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வித்ததாக அறிய வருகிறது.

அதிகாரிகளின் அந்தக் கருத்து முடிவாகி இறுதியில் உத்தரவானது

புதிய உத்தரவின் பிரகாரம் —

★ 'லங்கா முதித', 'லங்கா கல்யாணி' ஆகிய இரண்டு கப்பல்களும் நிவாரண உணவுப் பொருள்களை வடக்கே எடுத்துவரும்.

★ இப்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், அரசாங்கத் திணைக்களங்கள், தனியார் துறையினருக்கு பாவனைப் பொருள்களை எடுத்து வரப் பயன்படுத்தப்படும் 'குமண' கப்பலிலும் உணவுப் பொருள்களேஎடுத்து வரப்படும்.

★ 'ஹபரண' கப்பலில் திருகோணமலையில் இருந்து மா கொண்டுவரப்படும்.

★ 'மாஹோ' கப்பலில் மண்ணெண்ணெய் கொண்டு வரப்படும்.

இந்தப் புதிய உத்தரவின் படி இப்போது கொழும்புத் துறைமுகத்தில் தரித்துள்ள 'குமண' கப்பலில் உணவுப் பொருள்கள் மட்டுமே அனுப்பப்படும் என்ற தகவலை யாழ். அரச அதிபர் நேற்றுச் செயலகத்துக்கு அறிவித்ததாக அறிய வந்தது.

இந்த முடிவினால் அத்தியாவசிய சேவைகளுக்குத் தேவையான பாவனைப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்று அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைகளை நடத்துவதற்குத் தேவையான காகிதாதிகளைக் கூட எடுத்து வர முடியாத கஷ்ட நிலை உண்டாகும் என்றும் —

பத்திரிகைத் தாள் மற்றும் புத்தகங்கள், காகிதாதிகள் உட்பட பல பொருள்களை எடுத்துவர முடியாத ஆபத்து உருவாகும் என்றும் — சுட்டிக் காட்டப்பட்டது.

கொழும்பு அதிகாரிகளின் இந்த முடிவை அரச அதிபர் ஆட்சேபித்திருக்க வேண்டும் என்றும் தனியார் துறை மற்றும் ப. நோ. கூ. ச. வட்டாரங்களில் அதிருப்தி தெரிவிக்கப் பட்டது. [அ-3]

சோதனை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காடையர்கள் ஓடிவிடுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இது போன்ற சம்பவங்கள் கொழும்பில் அடிக்கடி இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

புலிகளுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னால் அப்பாவித் தமிழ்மக்கள் பாதிக்கப்படுவது—

வடபகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய மனிதாபிமான கடமை—

மனித உரிமை மீறல்களில் படையினர் ஈடுபடுவது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க அரசாங்க மட்டத்தில் ஆலோசகர் ஒருவரை நியமித்தல்—

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்தல்—

ஆகிய விடயங்கள் குறித்து கூட்டணிப் பிரதிநிதிகள் பிரஸ்தாபித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டணித் தூதுக்குழுவுக்கு அக்கட்சியின் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமை வகித்தார்.

பேச்சுக்களின்போது ஜனாதிபதிக்கு உதவியாக அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், ஜி. எல். பீரிஸ் ஆகியோர் பங்குபற்றினர். [உ-5-6]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01 - 06 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.